சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – 2022-2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை - மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் புதிய அறிவிப்பு - 100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவராக ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் விற்பனை நிலையம் அமைக்க ரூ.90.00 இலட்சம் மானியம் வழங்குதல் –ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉ_தி)துறை

அரசாணை (நிலை) எண். 71 நாள்:26.08.2022

சுபகிருது வருடம், ஆவணி 10 ஆம் நாள்

திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது:-

தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண். ஜி1/ 1952/2022, நாள்.27.05.2022

********

ஆணை:-

2022-2023-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு கூட்டத்தொடரில் இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள், கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்கள் :-

**"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக 100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவராக நியமனம் பெற்று, ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் விற்பனை நிலையம் தொடங்கிட, தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் மூலம் ரூ.90.00 இலட்சம் மானியம் வழங்கப்படும்".**

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக, மேலே படிக்கப்பட்ட தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கடிதத்தில், 2022-2023-ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்கள் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் 80 ஆதிதிராவிடர் மற்றும் 20 பழங்குடியினர் மக்களுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.3.00 இலட்சம் என்ற வீதத்தில் 100 நபர்களுக்கு திட்டத் தொகை ரூ.3.00 கோடி என்றும், இதில் பயனாளியின் பங்குத் தொகை ரூ.15.00 இலட்சம், மானியம் ரூ.90.00 இலட்சம், வங்கிக் கடன் ரூ.195.00 இலட்சம் என்று குறிப்பிட்டு மேலும் 80 ஆதிதிராவிடர் தொழில் முனைவோர்களுக்கு ஒன்றிய அரசு (SCA to SCSP) நிதியிலிருந்து ரூ.72.00 இலட்சம் (ரூ.90,000x80 நபர்கள்) பயன்படுத்திக்கொள்ள அனுமதியும், 20 பழங்குடியின தொழில் முனைவோர்களுக்கு மாநில அரசு நிதியிலிருந்து ரூ.18.00 இலட்சம் (ரூ.90,000x20 நபர்கள்) மானியம் விடுவிக்குமாறும், அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்களின் 2022-2023-ஆம் ஆண்டிற்கான அறிவிப்பான, 100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவராக சிமெண்ட் விற்பனை நிலையம் அமைக்க ரூ.90.00 இலட்சம் (ரூபாய் தொண்ணூறு இலட்சம் மட்டும்) மானியம் வழங்குவதற்கு ஏதுவாக 80 ஆதிதிராவிடர் தொழில் முனைவோர்களுக்கு ஒன்றிய அரசு (SCA to SCSP) நிதியிலிருந்து ரூ.72.00 இலட்சம் (ரூபாய் எழுபத்து இரண்டு இலட்சம் மட்டும்) (ரூ.90,000x80 நபர்கள்) பயன்படுத்திக் கொள்ள நிர்வாக அனுமதியும், 20 பழங்குடியின தொழில் முனைவோர்களுக்கு மாநில அரசு நிதியிலிருந்து ரூ.18.00 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம் மட்டும்) (ரூ.90,000x20 நபர்கள்) மானியமாக பெற்று செயல்படுத்த நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-இல், 80 ஆதிதிராவிடர் மக்கள் பயனடையும் விதமாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.72 இலட்சம் (ரூபாய் எழுபத்தி இரண்டு இலட்சம் மட்டும்) ஒன்றிய அரசின் PMAJAY (SCA to SCSP) திட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

5. மேலே பத்தி-3-இல், 20 பழங்குடியின மக்கள் பயனடையும் விதமாக ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ.18 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம் மட்டும்) கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

**"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் JY விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 309 உதவித் தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை."**

**(த.தொ.கு.2225 02 796 JY 30901)"**

6. மேலே பத்தி 3-இல் மாநில அரசு நிதியிலிருந்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை, மேற்காணும் பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தை, தாட்கோ மூலம் செயல்படுத்த ஏதுவாக இத்தொகையினைப் பெற்று தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல் கீழ்க்காணும் அலுவலக பெயர் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர்வரவாக (Contra Credit) வரவு வைப்பதற்கு பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்து அதிகாரம் வழங்கப்படுகிறது.

**" K வைப்புத் தொகைகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டியில்லா வைப்புத் தொகைகள் 8443-00-உரிமையியல் வைப்புத் தொகைகள் 800 பிற வைப்புத் தொகைகள் – BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி கழக் வைப்புத் தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள்."**

**(த.தொ.கு.8443 00 800BY 000G) (Receipt)**

**(த.தொ.கு.8443 00 800 BY 0004) (Outgo)**

7. இத்திட்டத்தினை செயல்படுத்த இணைப்பில் உள்ள வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றுமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.40708/ நிதி (ஆதி(ம)பந) /2022, நாள்.25.08.2022- இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது..

//ஆளுநரின் ஆணைப்படி//

T.S. ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர் , ஆதி திராவிடர் நலம், சென்னை-5
மேலாண்மை , இயக்குநர் , தாட்கோ , சென்னை -18,
இயக்குநர் ,பழங்குடியினர் நலம், சென்னை- 5
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்கள், (இயக்குநர் ஆதிதிராவிடர் நலம் வழியாக)
அனைத்து மாவட்ட மேலாளர்கள் , தாட்கோ.
(மேலாண்மை இயக்குநர் தாட்கோ, வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர் ,சென்னை 18/9
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் , சென்னை-5/8/9
மாவட்ட திட்ட அலுவலர் ,( பழங்குடியினர் நலம்)
( சேலம், தர்மபுரி, நாமக்கல், திருச்சி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர்)

நகல் :-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் ,சென்னை-9
ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர் , சென்னை -9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை-9
நிதி (ஆதி (ம )பந) த்துறை , சென்னை -9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல
(அநமு -1 / ஆதிந-5 / ப.மே 1) த் துறை ,சென்னை-9
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சி. சிவகுமார் 26/8/2022
பிரிவு அலுவலர்

26/8/22.

**இணைப்பு-I**

**அரசாணை(நிலை)எண். 71, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்(சிஉதி)துறை, நாள்.26.08.2022.**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவர் திட்டம் வழிகாட்டு நெறிமுறைகள்.**

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பை சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- வயது 18 – 65 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.
- G.S.T./ Pan Card / Address Proof இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.
- தாட்கோவின் மாவட்ட அளவிலான தேர்வு குழு மூலம் தேர்வு செய்யப்படும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பை சார்ந்த விண்ணப்பதாரர் தேர்வு செய்யப்பட்ட பின் சிமெண்ட் முகவருக்கான விண்ணப்பங்கள் TANCEM நிறுவனம் மூலம் பெற்று வழங்கப்படும்.
- விண்ணப்பத்தை முழுமையாக பூர்த்தி செய்து, தேர்வு குழு மூலம் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரருக்கு தாட்கோ மூலம் ரூ.5000 வைப்புத்தொகை (Deposit) TANCEM நிறுவனத்திற்கு செலுத்தப்படும்.
- கூடுதல் செலவினத்தை ஈடுசெய்ய மற்றும் அதிகபட்ச மானியத்தொகை சென்றடைய, ஆதிதிராவிட தனி நபர்களுக்கான திட்டத்தொகையில் 30 % விழுக்காடு (அல்லது) அதிகபட்சமாக ரூ.2.25 இலட்சம் மானியமும் மற்றும் பழங்குடியினர் தனி நபர்களுக்கான திட்டத்தொகையில் 50 % விழுக்காடு (அல்லது) அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் மானியம் விடுவிக்கப்படும்.

- சிமெண்ட் விற்பனை தொடர்பான விளம்பரம் செய்வதற்கு தேவையான சிற்றேடு (Brochures),பிரசுரங்கள் மற்றும் பெயர்ப்பலகை (Name Board) ஆகியவை TANCEM நிறுவனம் மூலம் வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரருக்கு சிமெண்ட் விற்பனை செய்வதற்கான வழிமுறைகள் (Procedures) வியாபார உத்திகள், கொள்முதல் செய்வோரை அணுகும் முறை சம்மந்தப்பட்ட பயிற்சிகள் (work shop) TANCEM நிறுவனம் மூலம் வழங்கப்படும். நேரடியாக களத்திற்கு அழைத்து சென்று பார்வையிடவும் (plant visit )TANCEM நிறுவனம் மூலம் ஏற்பாடு செய்யப்படும்.

பயனாளியின் வியாபார வளர்ச்சி குறித்து கண்காணிக்கப்பட்டு, மாதாந்திர முன்னேற்ற அறிக்கையும் TANCEM நிறுவனம் மூலம் தாட்கோவுக்கு வழங்கப்படும். தாட்கோ நிறுவனத்தின் இரண்டாம் நிலை அலுவலர்கள் மற்றும் மாவட்ட மேலாளர்களுடன் இணைந்தும் கண்காணிக்கப்படும்.

**விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:**

கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு மாவட்டமேலாளர், தாட்கோ ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு பயனாளிகளைத் தேர்வுசெய்யும்.

| | |
|---|---|
| மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| திட்ட இயக்குநர்,DRDA | உறுப்பினர் |
| திட்ட அலுவலர், மகளிர் திட்டம் | உறுப்பினர் |
| TANCEM நிறுவனத்தின் பொது மேலாளர், | உறுப்பினர் |
| முன்னோடி வங்கி மேலாளர் | உறுப்பினர் |
| சம்பந்தப்பட்ட வங்கியின் ஒருங்கிணைப்பாளர் | உறுப்பினர் |
| பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் | உறுப்பினர் |
| மாவட்ட மேலாளர், தாட்கோ | ஒருங்கிணைப்பாளர் மற்றும் உறுப்பினர். |

T.S. ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர். 26/8/2022

26/8/22